




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 183 | 4 Pages | 31.01.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 183 | 4 பக்கங்கள் | 31.01.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**

**நன்குடையான் கட்டே தெளிவு**

**விளக்கம்:**

**அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனைத் தெளியலாம்.**

## நவீன வாழ்க்கை, காற்று மாசுபாடு;டெல்லியில் இதய நோய்களால் இறப்பு அதிகரிப்பு



புதுடெல்லி, ஜன.31


டெல்லியில் மாரடைப்பு மற்றும் பிற இதயம் தொடர்பான நோய்களால் ஏற்படும் இறப்புகள் அதிகரித்து வருகின்றன. 2024ம் ஆண்டில் இதுபோன்ற இறப்புகளில் 50 சதவீதம் அதிகரித்துள்ளது.

2023ம் ஆண்டில். டெல்லியில் இதய நோய்களால் ஏற்படும் இறப்புகள் 22,385 ஆக இருந்தன. இது 2024ல் 1,84,539 ஆக அதிகரித்தது. டெல்லி அரசாங்கத்தின் சமீபத்திய அறிக்கையின்படி டெல்லியில் கடந்த சில ஆண்டுகளில் 3,20,957 பேர் மாரடைப்பு மற்றும் பிற இதய நோய்களால் இறந்துள்ளனர்.

இவற்றில் 108,872 பேர் 4564 வயதுக்குட்பட்ட வர்கள் 82,048 பேர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். 2544 வயதுக்குட்பட்டவர்களில் 46,129 பேர் இறந்துள்ளனர். 14,321 பேர் 14 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது. பரம்பரைகாரணிகள் இதய நோய்களை ஏற்படுத்தும் என்பது உண்மைதான் ஆனால் நவீன வாழ்க்கை முறை காரணமாக ஆபத்து அதிகரித்து வருகிறது.

புகைபிடித்தல். தொலைக்காட்சிப் பழக்கம் உடல் செயல்பாடு இல்லாமை. அதிக மன அழுத்தம் தூக்கமின்மை காற்று மாசுபாடு இந்த காரணிகள்அனைத்தும்டெல்லியில்மாரடைப்புகளின்எண்ணிக்கையை அதிகரிக்கின்றன என்று ஸ்ரீ பாலாஜி அதிரடி மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் அமர் சிங்கால் தெரிவித்துள்ளார்.

## மணிப்பூரில் 3 பயங்கரவாதிகள் கைது



இம்பால், ஜன.31

மணிப்பூர் மாநிலத்தின் இம்பால் கிழக்கு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகளை சேர்ந்த பயங்கரவாதிகள் 3 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து வெடிபொருட்கள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சிறிய அளவிலான பீரங்கி, போதைபொருட்கள் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களை இந்தியாமியான்மர் எல்லையை ஒட்டிய வனப்பகுதியில் போலீசார் செயலிழக்க செய்தனர்.

## மராட்டியம்: 400 மீட்டர் பயணிக்க அமெரிக்க சுற்றுலா பயணியிடம் ரூ. 18 ஆயிரம் வசூலித்த டாக்சி டிரைவர் கைது



அமெரிக்காவை சேர்ந்த இளம்பெண் அர்ஜெண்டினா அரினோ. இவர் மராட்டிய மாநிலம் மும்பைக்கு சுற்றுலா வந்துள்ளார்.

கடந்த 12ம் தேதி மும்பை வந்த அரினோ விமான நிலையத்தில் இருந்து 400 மீட்டர் தொலைவில் நட்சத்திர ஓட்டலில் தங்க முன் பதிவு செய்துள்ளார்.

அதன்படி, மும்பை விமான நிலையத்தில் இருந்து ஒரு டாக்சியில் அந்த ஓட்டலுக்கு புறப்பட்டுள்ளார். வெளிநாட்டு பயணி என்பதால் அரினோவை ஏமாற்ற நினைத்த டாக்சி டிரைவர் ஓட்டலுக்கு நேர் வழியில் செல்லாமல் சுமார் 30 நிமிடங்கள் மாற்று வழியில் காரை இயக்கியுள்ளார்.

இறுதியில் ஓட்டலில் அரினோவை இறக்கி விட்ட டிரைவர், பயணத்திற்கான தொகையாக 18 ஆயிரம் ரூபாய் (200 அமெரிக்க டாலர்கள்) கேட்டுள்ளார்.

இதனை நம்பிய அரினோ டாக்சி டிரைவர் கேட்ட பணத்தை கொடுத்துள்ளார். பின்னர், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அரினோ தனது எக்ஸ் பக்கத்தில் இது குறித்து தெரிவித்து மும்பை போலீசை டாக் செய்துள்ளார்.

அரினோவில் டுவிட் வைரலான நிலையில் இது குறித்து விசாரணை நடத்திய மும்பை போலீசார், திஷ்ராஜ் (வயது 50) என்ற டாக்சி டிரைவரை கைது செய்தனர்.

# ரூ.822 கோடியில் பிராட்வே புதிய பேருந்து நிலையம்: அடிக்கல் நாட்டினார் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜன.31

ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் மற்றும் குறளகம் கட்டுமானத்தின் சிறப்பம்சங்கள்

இத்திட்டம் உயர் நீதிமன்றம் மெட்ரோ நிலையம், குறளகம் மற்றும் MRTS / புறநகர் ரயில் நிலையம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு மையமாக திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக 9 தளங்களைக் கொண்ட Multi Modal Facility Complex கட்டடம் மற்றும் 10 தளங்களைக் கொண்ட குறளகம் கட்டடம் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளது. இவை 73 பேருந்துநிறுத்தங்களும், பயணிகள்கூடம், சில்லறை வணிக தளங்கள், அலுவலகப் பகுதிகள், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கான நிறுத்துமிட வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

MMFC திட்டமானது 26,240 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் மொத்தம் 1,36,580 சதுர மீட்டர் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்று முக்கிய கட்டட பிரிவுகளைக் கொண்டுள்ளது.

பிரிவு 1 இத்திட்டத்தின் மொத்த பரப்பளவு 1,08,290 சதுர மீட்டர் ஆகும். இதில் இரண்டு அடித்தளங்கள் ஒரு தரைத்தளம் மற்றும் எட்டு மேல் தளங்கள் கொண்டதாகும். பயணிகள் நேரடியாக உயர்நீதிமன்றம் மெட்ரோ நிலையம், NSC போஸ் ரோடு, Esplande ரோடு மற்றும் TNPSC ரோடு நுழைவு மற்றும் வெளியேற்று அமைப்பு வழியாக பேருந்து நிலையம் முதல் அடித்தளத்தில் அமைந்துள்ள பயணிகள் கூடத்தின் வழியாக தரை மற்றும் முதல் பேருந்து நிலையங்களுக்கு செல்லும்படி வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்த வடிவமைப்பின்படி பயணிகளுக்கும் பேருந்துகளுக்கும் ஏற்படும் இடையூறுகள் முற்றிலுமாக தவிர்க்கப்படும். இரண்டாவது அடித்தளம் கார் நிறுத்துமிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு அடுக்கு கார் நிறுத்தும் அமைப்பு உள்ளது. தரை மற்றும் முதல் தளம் பேருந்து நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 73 பேருந்துநிறுத்தங்கள் மற்றும் பயணிகளுக்கு தேவையான வசதிகளும் ஏற்படுத்தப்படும். இரண்டாவது முதல் எட்டாவது தளங்கள் வரை அலுவலக பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

பிரிவு 2 22,794 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட குறளகம் கட்டடம் 2 அடித்தளங்கள், தரைத்தளம் மற்றும் 9 மேல்தளங்களை கொண்ட கட்டடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் அடித்தளத்தில் இருந்து பயணிகளை MMFC கட்டடத்தின் பயணிகள் கூடத்திற்கும், கார் நிறுத்துமிடத்திற்கும் நேரடியாக செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அடித்தளத்தில்இரண்டு அடுக்கு கார் நிறுத்துமிட வசதியும், தரைத்தளம் முதல் இரண்டாம் தளம் வரை சில்லறை வணிக தளங்களாகவும் திட்டமிடப்பட்டுள்ளது, மூன்றாம் தளம் முதல் ஒன்பதாம் தளம் வரை அலுவலகப் பயன்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிரிவு 3 ஒரு அடித்தளம் மற்றும் ஒரு தரைத் தளத்தை கொண்ட துணை போக்குவரத்து நுழைவு கட்டடமும் இந்த திட்டத்தில் ஒரு பகுதியாகும். இது மெட்ரோ செயல்பாட்டு கட்டமைப்புகளை குறிப்பாக நுழைவு / வெளியேறும் கட்டமைப்புகளை உள்ளடக்கியது. இது பேருந்து முனையத்தின் இணைப்பு மண்டலத்தை NSC போஸ் சாலையில் அமைந்துள்ள பயணிகள் கூடத்துடன் இணைக்கிறது.

இந்த MMFC திட்டத்தில் 433 நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடங்கள் மற்றும் 1,174 இருசக்கர வாகன நிறுத்துமிடங்கள் போன்ற வசதிகளுடன், மின்சாரம், காற்றோட்டம், குளிர்சாதன வசதி, தீயணைப்பு அமைப்புகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மின்மாற்றி, ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு (IBMS),

நவீன கழிப்பறைகள் மற்றும் வெளிப்புற நடை மேம்பாலங்கள் உள்ளிட்ட தேவையான உள்கட்டமைப்புகளும் இதில் அடங்கும்.

இந்த பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலைய வசதியானது, பொதுமக்களுக்கு பெருமளவில் பயனளிக்கும் வகையிலும், மேலும் எளிதான, சீரான, நவீன வசதிகளையும் அளிக்கும். சென்னை மாநகரின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான அரசின் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களில் இத்திட்டமானது ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய ஃபீல்ட் வில்வித்தை உள்ளரங்க சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் பட்டம் வென்ற மாணவர்




வேளச்சேரி ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியின் 5 ஆம் வகுப்பு மாணவர் பிரணிஷ் சுதன் லட்சுமணன், மகாராஷ்டிராவின் ராய்காட்டில் 2025 டிசம்பர் 22 முதல் 28 வரை நடைபெற்ற தேசிய ஃபீல்ட் வில்வித்தை உள்ளரங்க சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் பட்டத்தை வென்றார்.

பிரணிஷ் சுதன், 10 வயதுக்குட்பட்டோர் மற்றும் 14 வயதுக்குட்பட்டோருக்கான ரிகர்வ் பேர்போ பிரிவில் 1 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கத்தை வென்றார். மாஸ்டர் ஜே.பி. சிவபாலன் தலைமையிலான தமிழ்நாடு ஃபீல்ட் வில்வித்தை விளையாட்டு அணி 51 பதக்கங்களையும், ஒட்டுமொத்தமாக இரண்டாம் இடத்திற்கான கோப்பையையும் வென்றது.

## மருதமலை கோவில் வனப்பகுதியில் 184 அடி உயர முருகன் சிலையை அமைக்க அனுமதிக்க முடியாது சென்னை ஐகோர்ட்டு

சென்னை, ஜன.31

கோவை மாவட்டம் மருதமலை வனப்பகுதியில் ரூ.110 கோடி செலவில், 184 அடி உயரத்துக்கு முருகன் சிலை அமைக்கப்படும் என்று அறநிலையத் துறை அறிவித்தது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் விலங்குகள் நல ஆர்வலர் எஸ்.முரளிதரன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நீதிபதிகள் என்.சதீஷ்குமார், நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் கொண்ட சிறப்பு டிவிசன் பெஞ்சில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, 184 அடி உயரம் கொண்ட முருகன் சிலை அமையவுள்ள இடத்தை நேரில் ஆய்வு செய்த வக்கீல்கள் டி.மோகன், செவணன் மோகன் உள்ளிட்டோர் கொண்ட குழு அறிக்கை தாக்கல் செய்தது. அதேபோல, அறநிலையத்துறை தரப்பிலும் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கையை படித்துப்பார்த்த நீதிபதிகள், "பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்து 137 மீட்டர் தூரத்தில் தான் சிலை அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்து 500 மீட்டர் சுற்றளவுக்குள் இதுபோல கட்டுமானங்கள் மேற்கொள்ள முடியாது. 500 மீட்டர் சுற்றளவுக்கு உட்பட்ட பகுதியில் எந்தவொரு கட்டுமானத்தையும் அனுமதிக்க முடியாது. முருகன் சிலை அமைத்தால் தினமும் லட்சக்கணக்கில் பக்தர்கள் வருவார்கள். அதனால் வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும்" என்று கருத்து தெரிவித்தனர். அதற்கு அறநிலையத் துறை தரப்பில், "முருகன் சிலைக்கு பூஜைகள் நடத்தப்படாது. சிலையை வலம் வந்து வழிபாடு நடத்த மட்டுமே அனுமதிக்கப்படும். 137 மீட்டர் தூரம் என்பதற்கு பதிலாக தற்போது 437 மீட்டர் தொலைவில் முருகன் சிலை அமைக்க மாற்று இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.

இதையேற்க மறுத்த நீதிபதிகள், "அந்த தூரமும் வனப்பகுதியின் சுற்றுச்சூழலு க்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்து 500 மீட்டர் சுற்றளவுக்கு அப்பால் வேறு ஏதாவது ஒரு மாற்று இடத்தை கண்டறிந்து சிலை அமைக்கலாம். 500 மீட்டருக்குள் சிலை அமைக்க அனுமதி க்க முடியாது. புதிய இடத்தை தேர்வு செய்து அதுகுறித்து அறநிலையத்துறை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டனர். விசாரணையை 2 வாரத்துக்கு தள்ளி வைத்தனர்.






## 2 மனைவிகளும் பிரிந்து சென்றதால் மனவேதனை: வாலிபர் தற்கொலை

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் தாலுகா மூரார்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் குமார் (48 வயது), தொழிலாளி. இவருக்கு முதல் திருமணம் முடிந்து மனைவி பிரிந்து சென்று விட்டார். அதன் பின்னர் மற்றொரு பெண்ணை, இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். குடும்பத்தகராறு காரணமாக, 2வது மனைவியும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு குமாரை விட்டு பிரிந்து சென்று விட்டார். இதனால் குமார் தனியாக வசித்து வந்ததாக தெரிகிறது. 2 மனைவிகளும் பிரிந்து சென்றதால் அவர் மனவேதனையில் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு, திருப்பூர் மாவட்டம் நத்தக்காடையூர் பகுதிக்கு குமார் வந்தார். அங்கு செயல்படும்

ஒரு தனியார் நிறுவனத்தில் தங்கியிருந்து கூலி வேலை செய்து வந்தார். இந்த சூழலில் 2 மனைவிகளும் பிரிந்து சென்றதால், விரக்தியில் இருந்த அவர் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தார். இதையடுத்து கடந்த 28ந்தேதி இரவு வேலையை முடித்த பின்பு நிறுவனத்தை விட்டு வெளியேறிய அவர், பெட்ரோல் வாங்கிக் கொண்டு முத்தூர்காங்கயம் சாலை, மேட்டாங்காட்டு வலசு வாய்க்கால்பாலம் பேருந்து நிறுத்தம் அருகே வந்தார். அங்கு நடுரோட்டில் பெட்ரோலை தனது உடலில் ஊற்றி தீ வைத்துக்கொண்டார். சிறிது நேரத்தில் தீ உடல் முழுவதும் பரவியது. வேதனை தாங்க முடியாமல் அலறினார். அவரது சத்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் தீயை அணைத்து, அவரைமீட்டு, சிகிச்சைக்காக காங்கயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர், மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து வெள்ளகோவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

தினகனி



# 78 மின்திருட்டுகள் மற்றும் 30 விதிமீறல்கள் கண்டுபிடிப்பு: மின்சார வாரியம் நடவடிக்கை




சென்னை, ஜன.31

தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

16.12.2025 முதல் 31.12.2025 வரை தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் கோவை, மதுரை, திருச்சி ஆகிய அமலாக்க கோட்டங்களுக்குட்பட்ட மேட்டூர்,திருப்பூர்,கோபி, பல்லடம், ஈரோடு, நாமக்கல், மதுரை, தஞ்சாவூர், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மின் பகிர்மான வட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் கோவை, கோவை வடக்கு, திருப்பூர், சேலம், ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், திருச்சி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய உபகோட்ட அமலாக்க பிரிவு அதிகாரிகள் அதிரடி கூட்டு ஆய்வு மேற்கொண்ட போது 78 மின்திருட்டுகள் மற்றும் 30 விதிமீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டு. இழப்பீட்டு தொகையாக ரூ.96,70,254/ (ரூபாய்தொண்ணூற்று ஆறுலட்சத்து எழுபதாயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) மின் நுகர்வோருக்கு விதிக்கப்பட்டது.

# நந்தனம் அரசு கல்லூரியில் இளம் பெண் பாலியல் வன்கொடுமை: டிடிவி தினகரன் கண்டனம்



சென்னை, ஜன.31

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை அரசு கலைக் கல்லூரியில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட இளம் பெண் – தமிழகம் எந்தவகையிலும் பெண்களுக்கு பாதுகாப்பானதல்ல என்ற சூழலை உருவாக்கிய திமுக அரசின் மெத்தனப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

சென்னை நந்தனம் அரசு கலைக்கல்லூரியின் உணவக விடுதியில் பணியாற்றி வந்த இளம் பெண் ஒருவர் மூன்று பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

சென்னை தரமணி அருகே வடமாநிலத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, குடும்பத்துடன் கொலை செய்யப்பட்ட செய்தி ஏற்படுத்திய அதிர்வலைகள் அடங்குவதற்கு முன்பாகவே, தற்போது அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் அரங்கேறியிருக்கும் இந்த சம்பவம் தமிழகம் எந்தவகையிலும் பெண்களுக்கு பாதுகாப்பானது அல்ல என்பதை மீண்டும், மீண்டும் உறுதிபடுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் பெருகிக் கொண்டிருக்கும் தமிழகத்தை, பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மேடைக்கு மேடை முழங்கிக் கொண்டிருப்பது அவரின் அறியாமையையே வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

எனவே, அரசுக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தொடர்புடைய அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, எஞ்சியிருக்கும் நாட்களிலாவது பெண்களின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காலில் விழுந்ததை என்னவென்று சொல்வது? எடப்பாடி பழனிசாமி விமர்சனத்துக்கு ப.சிதம்பரம் பதிலடி



காரைக்குடி, ஜன.31

காரைக்குடியில் காங்கிரஸ் தலைவர் ப.சிதம்பரம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், காங்கிரஸ் திமுகவிடம் கெஞ்சுகிறது என்று ராகுல் காந்தி கனிமொழி சந்திப்பு குறித்து எடப்பாடி பழனிசாமி விமர்சித்தது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த ப.சிதம்பரம், "நேரடியாக இரு கட்சித் தலைவர்கள் அல்லது தலைமையில் இருப்பவர்கள் சந்தித்து பேசுவது, கெஞ்சுவது என்றால், காலில் விழுவதற்கு என்ன பெயர் சொல்வது?" என்று பதிலடி கொடுத்தார்.

மேலும் அவர் கூறும் போது, "ஆட்சியில் பங்கு என்பது காங்கிரஸ் கட்சியில் ஒரு பொருளாக பேசப்பட்டது என்பதை பத்திரிகைகளில் பார்த்தேன். அதுகுறித்து இரண்டு கட்சி தலைமைகளும் பேசி முடிவு எடுப்பார்கள்; யாரும் அலட்டிக் கொள்ள வேண்டாம்.

தவெக தலைவர் விஜய்யின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர், காங்கிரஸ் கட்சி, தவெகவுடன் கூட்டணி சேர்ந்தால் நன்றாக இருக்கும் என்று அவருடைய ஆசையை சொல்கிறார். அதில் என்ன தவறு?" என்று கூறினார்.

# புதுக்கோட்டை: நெய்வேலி வீரத்தாயி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்



புதுக்கோட்டை, ஜன.31

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே உள்ள நெய்வேலி வடபாதிவடதெருகிராமத்தில் உள்ள ஸ்ரீ வீரத்தாயி அம்மன் கோவில் புனரமைக்கப்பட்டு, தொடர்ந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் நிறைடைவந்த நிலையில் யாக சாலை பூஜை மற்றும் காப்பு கட்டுதலுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது.

பல்வேறு புனித தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித நீர் யாக சாலையில் வைத்து பூஜை செய்யப்பட்டது. பூஜையின் நிறைவில் கடம் புறப்பாடு நடைபெற்றது. கருடன் வானில் வட்டமிட அம்பிகையின் ஆலயத்தில் உள்ள கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் மற்றும் மெய்யன்பர்கள் திரளாக கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# சென்னை ஆலந்தூரில் புதிய மண்டல அலுவலகக் கட்டட பணி தொடக்கம்



சென்னை, ஜன.31

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு , குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு160க்குட்பட்ட புதுத் தெருவில் ரூ.32.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய மண்டல அலுவலகக் கட்டடத்திற்கான பணியினை இன்று (29.01.2026) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இந்த புதிய மண்டல அலுவலகம் கட்டடமானது 8,798 சதுர மீட்டர் பரப்பளவில் தாழ்தளம், தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ளது. தாழ்தளத்தில் வாகன நிறுத்த வசதி, தரைத்தளத்தில் பேரிடர் மேலாண்மைத் துறை உபகரணங்கள் வைப்பு அறைகள், முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் ஆலந்தூர் மண்டல அலுவலகம், மூன்றாவது தளத்தில் தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகம், நான்காவது தளத்தில் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பீகார் தொழிலாளி குடும்பமே படுகொலை; மது கடைகளை நிரந்தரமாக மூட வேண்டும்: டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜன.31

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர், தலைவர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டு உள்ள அறிக்கையில், வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு என்ற வாக்கியம் ஏட்டளவில்தான் என்பதற்கு சான்றுதான் பீகார் கூலி தொழிலாளி, அவரது மனைவி மற்றும் 2 வயது ஆண் குழந்தை கொலை.

இக்கொலைக்கு அடிப்படைக்காரணம் மது. ஒரு பெண், ஒரு குழந்தை இவர்களில் யாரையாவது கொல்ல வேண்டும் அல்லது அருகே உள்ள மதுவை அருந்த வேண்டும் என்ற கதைக்கேற்ப மதுவை அருந்திவிட்டு பெண்ணை அடையதடையாக இருந்த குழந்தையை கொன்று பின் அப்பெண்ணையும் கொன்றதாக அக்கதை முடியும்.

ஆக மது அனைத்தையும் செய்ய வைக்கும் என்பதே இக்கதையின் சாராம்சம். அண்மையில் தஞ்சையில் நடைபெற்ற தி.மு.க. மகளிர் மாநாட்டில் பேசிய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் உருவாக்கியதால்தான் தமிழகத்தில் அதிக அளவிலான பெண்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறார்கள் என்றார்.

அப்படி சொன்ன மறுநாளே தமிழகத்தையே உலுக்கிய கொடூர கொலை. வேலை கேட்டு நம்பி வந்த குடும்பத்தை நம்பிக்கை துரோகம் செய்து மதுபோதையில் கொன்றதாக கொலையாளிகள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

ஆனால் பஞ்சம் பிழைக்க வந்த வெளிமாநிலத்தவரையும் விட்டு வைக்காத மதுபோதை ஒரு குடும்பத்தையே நிர்மூலமாக்கியுள்ளது. பெண்கள் அச்சமின்றி வாழ இனியாவது மதுவை அறவே ஒழிக்க அரசு மது கடைகளை நிரந்தரமாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். இலவசங்களை அளிக்க மது வருவாயை தவிர்த்து வேறு வகையில் வருவாயை பெற பல வழிகள் உள்ளன என தெரிவித்து உள்ளார்.

# தமிழ்நாட்டில் நாள்தோறும் பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு: எடப்பாடி பழனிசாமி தாக்கு



சென்னை, ஜன.31

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

நந்தனம் அரசுக் கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள கேண்டினில் பணிக்கு சேர்ந்த பெண் ஒருவரை, கல்லூரி வளாகத்திலேயே வைத்து கேண்டின் மாஸ்டர் மற்றும் பலர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் நெஞ்சை பதற வைக்கிறது.

தமிழ்நாட்டில் நாள்தோறும் கொடுரமான பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை இந்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வேடிக்கை பார்த்து வருவது வெட்கக்கேடானது.

சென்னையில் நேற்று பீகாரைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு அவரும் அவரது கணவரும் குழந்தையும் கொடூரமாக கொல்லப்பட்ட, இந்தியாவை பதைபதைக்க செய்த சம்பவத்தின் பதட்டமே இன்னும் ஓய்வுறாத நிலையில்,

இன்று மீண்டும் ஒரு பெண், அரசுக் கல்லூரியின் கேண்டினில் வைத்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளாரே, என்பது குறித்து கேட்டால் அப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பதே தெரியாது என்கிறார் அமைச்சர் மா.சுப்பிரமணியன். அக்கறையற்ற அமைச்சரின் பேச்சு வேதனைக்குரியது மட்டுமல்ல கண்டனத்திற்குரியதும் கூட.

ஆயிரம் முறை நான் மீண்டும் மீண்டும் கூறிவருவதை போல திமுக ஆட்சியில் தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலமாக மாறிப்போயுள்ளதையே இந்த தொடர் சம்பவங்கள் அழுத்தமாக நிரூபித்துள்ளது. இனியும் பொம்மை போன்று செயல்படாது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த அரசின் முதல்அமைச்சரை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நந்தனம் அரசு கல்லூரியில் பாலியல் வன்கொடுமை உறுதி சென்னை காவல்துறை

சென்னை, ஜன.31

சென்னை காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 28.01.2026 அன்று சமூக நல அலுவலகத்தின் ஒன் ஸ்பாட் மைய நிர்வாகி அளித்த புகாரில், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 20 வயது பெண்ணை, அரசு கலைக் கல்லூரி, நந்தனம் வளாகத்தில் கேன்டீன் நடத்தி வந்த முத்துச்செல்வம் மற்றும் அங்கு பணிபுரிந்து வந்த குணசேகரன் மற்றும் கார்த்திகேயன் ஆகியோருடன் சேர்ந்து கல்லூரி கேன்டீன், கல்லூரி வளாகத்திலுள்ள அறை ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்டவரை பாலியல் வன்கொடுமை செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகாரின் அடிப்படையில், சைதாப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உரிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில், மேற்படி பாதிக்கப்பட்ட நபரை கேன்டீன் உரிமையாளர் முத்துச்செல்வம் கும்பகோணத்தில் தனக்குத் தெரிந்தவர் மூலம் சென்னைக்கு அழைத்துவந்து, கேன்டீனில் பணியமர்த்தியுள்ளார் என்பது தெரிய வருகிறது. இவர், இந்த கேன்டீனை கல்லூரியுடன் நேரடி ஒப்பந்தத்தின் மூலம் கடந்த 12 வருடங்களாக நடத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

மேலும், பாதிக்கப்பட்டவருக்கு தேவையான மருத்துவ சிகிச்சை மற்றும் மனநல ஆலோசனை வழங்கப்பட்டது. விசாரணையின் போது, குற்றச்சாட்டுக்குட்பட்ட நபர்கள் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில், (A1) முத்துச்செல்வம், (A2) குணசேகரன் மற்றும் (A3) கார்த்திகேயன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

இவ்வழக்கு சம்மந்தமாக தீவிர புலன் விசாரணை செய்து, சம்மந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு கூடிய விரைவில் அதிகபட்ச தண்டனையைப் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லையில் கஞ்சா வைத்திருந்த வாலிபர் கைது

நெல்லை, ஜன. 31

திருநெல்வேலி மாநகரம் டவுண் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தொட்டி பாலத்தெரு பகுதியில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பாண்டி மற்றும் போலீசார் ரோந்து பணிக்கு சென்றனர்.

அப்போது அப்பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த டவுண் தொட்டி பாலதெருவை சேர்ந்த ரவி மகன் மோகன்காந்தி (வயது 19) என்பவரை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர்.

போலீசார் மோகன்காந்தியிடம் மேற்கொண்ட சோதனையில் அவர் சுமார் 30 கிராம் கஞ்சாவை மறைத்து வைத்திருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து அந்த கஞ்சாவை பறிமுதல் செய்த டவுண் போலீசார் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீரழிந்துவிட்டது விஜய் தாக்கு



சென்னை, ஜன.31

சென்னையில் அடுத்தடுத்த பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களால் தமிழகமே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளதாக தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது'

"தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துவிட்டது என்பதற்குச் சான்றாக நாள்தோறும் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. தலைநகர் சென்னையில் அடுத்தடுத்த பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களால் தமிழகமே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

சென்னை அடையாறு பகுதியில் காவலாளியாக வேலை பார்த்து வந்த பீகார்மாநிலத்தைச்சேர்ந்த தொழிலாளியும் அவர் மனைவியும் குழந்தையும் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும், நந்தனத்தில் அரசுக் கல்லூரி கேண்டீனில் பணிபுரிந்த இளம்பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவமும் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றன. இச்சம்பவங்கள், கடும் கண்டனத்திற்கு உரியவை.

தமிழ்நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை,பிழைப்புக்காகத் தமிழ்நாட்டை நம்பி வந்தவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற சூழலைத்தான் இந்தக் கபட நாடகத் திமுக அரசு உருவாக்கி வைத்திருக்கிறது.

கொள்ளை அடிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துவதால், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களைத் தடுப்பதிலும், சட்டம் ஒழுங்கைக் காப்பதிலும் இந்த ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவதில்லை. இதனால்தான் கல்வி நிறுவனங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன.

குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டிய அரசு, மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதால், கொடுங்குற்றங்களில் ஈடுபடச் சமூக விரோதக் கும்பல்களுக்குத் துணிச்சல் வருவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தர உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், முதல்வர் அவர்கள் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்றும், எந்தக் கொம்பனாலும் குறை சொல்ல முடியாத ஆட்சி என்றும் வாய்கூசாமல் பொய்யையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்.

ஆட்சியின் இறுதிக்கால நாள்களை எண்ணிக் கொண்டிருக்கும் முதல்வர் அவர்கள், இனி இருக்கும் கொஞ்சம் நாள்களிலாவது சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மக்களுக்கு எதிரான, மக்களுக்குக் கொஞ்சமும் பாதுகாப்பே இல்லாத, இந்த வெற்று விளம்பர மாடல் ஆட்சிக்கு முடிவுரை எழுதத் தமிழக மக்கள் தயாராகிவிட்டார்கள்!"

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# மருத்துவத் துறை ஒப்பந்த ஊழியர்களை கொச்சைப்படுத்திய மா. சுப்பிரமணியன் அண்ணாமலை கண்டனம்



சென்னை, ஜன.31

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

அரசுத் துறைகளில், பத்து ஆண்டுகளுக்கும் மேல் ஒப்பந்த ஊழியர்களாகப் பணியாற்றும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று, திமுக தனது தேர்தல் வாக்குறுதி எண் 153ல் கூறியிருந்தது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி வேண்டுகோள் வைத்த மருத்துவத் துறை ஒப்பந்த ஊழியர்களை, "தேர்தல் நேரத்தில் போராடுவது பேஷன் ஆகி விட்டது" என்று கொச்சைப்படுத்தியிருக்கிறார் அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள். கொரோனா பெருந்தொற்று காலங்களிலும், தங்கள் உயிரைக் குறித்துக் கவலைப்படாமல், மக்களுக்காக உழைத்த மருத்துவத் துறை ஊழியர்களை அவமானப்படுத்திய அவருக்கு, கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படியாவது ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கில், தேர்தல் வாக்குறுதி என்ற பெயரில், அனைத்துத் தரப்பு மக்களையும் ஏமாற்றி ஆட்சிக்கு வந்துவிட்டு, இன்று வாக்குறுதியை நிறைவேற்றக் கோரும் மக்களை, அவமானப்படுத்துவது திமுகவின் வழக்கமாகி விட்டது.

தமிழக மக்களை எத்தனை கிள்ளுக்கீரையாக நினைத்திருந்தால், கடந்த 2021 தேர்தல் வாக்குறுதிகளில் பத்து சதவீதம் கூட நிறைவேற்றாமல், 2026 தேர்தலுக்கு, மீண்டும் ஒரு ஏமாற்றுக் கூட்டத்தை தேர்தல் வாக்குறுதிகள் தயாரிக்க அமைத்திருப்பார்

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் . என தெரிவித்துள்ளார்.

## முன்பகையில் வாலிபரை இரும்பு கம்பியால் தாக்கியவர் கைது

திருநெல்வேலி, ஜன.31

திருநெல்வேலி மாநகரம் பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கட்டபொம்மன் தெருவில் செல்வம் மகன் சாமுவேல் (வயது 33) என்பவர் வசித்து வருகிறார்.

சாமுவேலுக்கும் பேட்டை கருங்காடு ரோடு பகுதியில் வசிக்கும் சக்திவேல் மகன் மகேஷ்(எ) கண்ணன் என்பவருக்கும் இடையே முன் பகை இருந்து வந்துள்ளது.



அந்த முன் பகை காரணமாக 28.1.2026 அன்று கருங்காடு ரோட்டில் உள்ள மதுரைவீரன் கோயில் முன்பாக நின்றுகொண்டிருந்த சாமுவேலை, மகேஷ் அவதூறு வார்த்தைகளால் பேசி, அச்சுறுத்தி, இரும்பு கம்பியால் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தியுள்ளார். இதன் காரணமாக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் சாமுவேல் கொடுத்த புகாரின் பேரில் பேட்டை காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து மகேஷ் (எ) கண்ணனை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்

## சட்டசபை தேர்தலில் தொகுதி மாற திட்டமா? நயினார் நாகேந்திரன் பதில்

திருநெல்வேலி, ஜன.31

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்மையில் உடன்பிறப்பே வா நிகழ்ச்சியின்போது திமுக நிர்வாகிகளுக்கு ஒரு எச்சரிக்கையை கொடுத்தார். என்ன நடந்தாலும், திருநெல்வேலி தொகுதியில் திமுக வெல்ல வேண்டும். அப்படி இல்லாவிட்டால் திமுக நிர்வாகிகளை பதவியில் இருந்து நீக்கி விடுவேன் என்று கூறினார்.

இந்த திருநெல்வேலி சட்டசபை தொகுதியில் 2001ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை நயினார்நாகேந்திரன் 5 முறை போட்டியிட்டுள்ளார். இதில் 2001, 2011, 2021 ஆகிய 3 தேர்தலில் வெற்றிபெற்றார். ஆனால் 2006, 2016 ஆகிய சட்டசபை தேர்தலிலும், 2024ம் ஆண்டு நடந்த எம்.பி. தேர்தலிலும் தோல்வி அடைந்தார்.



இதனிடையே நயினார் நாகேந்திரன் தொகுதி மாற போவதாக தகவல் வெளியானது. சாத்தூர் அல்லது நாங்குநேரி தொகுதியில் போட்டியிட நயினார் நாகேந்திரன் முடிவு செய்ததாக கூறப்பட்டது. இந்த நிலையில் திருநெல்வேலியில் இன்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஓ. பன்னீர்செல்வம் ஆலோசனை கூட்டத்தை முடிக்கட்டும். நல்லவர்கள் எல்லாம் எங்கள் பக்கம் வருவார்கள். ஓ.பன்னீர்செல்வம் நல்லவர்தான். கூட்டணி குறித்து இதுவரையில் நான் அவரிடம் பேசவில்லை. தேவைப்பட்டால் கண்டிப்பாக பேசுவேன். 2001, 2006, 2011, 2016, 2021 ஆகிய 5 தேர்தல்களில் திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்டு இருக்கிறேன். வரும் சட்டசபை தேர்தலிலும் திருநெல்வேலி தொகுதியில்தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 'சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு என்று சொல்வதில் ஒரு கொடிய அச்சுறுத்தல் இருக்கிறது' சீமான் ஆவேசம்

சென்னை, ஜன.31

இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்யக்கோரி நாம் தமிழர்கட்சியின்தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் சீமான் பேசியதாவது;

"என் அன்பு சகோதரன் ஏ.ஆர்.ரகுமானை சிறுபான்மை என்று சொல்கிறார்கள். அதே சமயம், ஏ.ஆர்.ரகுமானின் சொந்த அக்கா மகன் ஜி.வி.பிரகாஷ் இந்து என்பதால் அவரை பெரும்பான்மை என்று சொல்கிறார்கள். தாய்மாமன் சிறுபான்மை, மருமகன் பெரும்பான்மையா?

இசைஞானி இளையராஜா இந்து. அவரது மகன் யுவன் சங்கர் ராஜா இஸ்லாமிய மதத்தை ஏற்றுள்ளார். எனவே அப்பா பெரும்பான்மை, மகன் சிறுபான்மையா? மதத்தை வைத்து எப்படி மனிதர்களை மதிப்பிடுகிறார்கள்?

நாங்கள்தான் சிறு



பான்மை மக்களின் பாதுகாவலர்கள் என்று சிலர் சொல்கிறார்கள். சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு என்று சொல்லும் போது அந்த சொல்லில் ஒரு கொடிய அச்சுறுத்தல் இருக்கிறது.

பாதுகாப்பற்ற சூழலில் அவர்களை வாழ வைத்திருக்கிறீர்களா? ஒட்டுமொத்த நாட்டு மக்களின் பாதுகாப்புதான் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர் உள்பட எல்லாருக்குமான பாதுகாப்பு."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பைக் மோதி பலியான தொழிலாளியின் குடும்பத்துக்கு ரூ.34.26 லட்சம் இழப்பீடு சென்னை கோர்ட்டு தீர்ப்பு




சென்னை, ஜன.31

காஞ்சிபுரம் கேளம்பாக்கத்தை சேர்ந்தவர் குமார் (40). இவர் முடிதிருத்தும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் 10ந்தேதி இளவந்தாங்கல் அருகே சாலையில் நின்றுகொண்டிருந்தபோது, அந்த வழியாக வேகமாக வந்த பைக் அவர் மீது மோதியது. இதில் படுகாயமடைந்த குமார், செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பரிதாபமாக இறந்தார்.

இந்த விபத்தில் இழப்பீடுகோரி அவரதுமனைவி கவிதா, சென்னை மோட்டார்வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயத்தில் மனு தாக்கல்செய்தார். மனுவை விசாரித்த நீதிபதி, விபத்தில் பலியான குமாரின் குடும்பத்தினருக்கு தேசியமாக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனம் ரூ.34 லட்சத்து 26 ஆயிரம் இழப்பீடு வழங்க தீர்ப்பளித்தார்.

## ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம்: தமிழக அரசு அறிவிப்பு




சென்னை, ஜன.31

ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 4,000 கோடி மதிப்பில் 30 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 2,000 கோடி, தமிழ்நாடு

அரசின் 7.50 சதவீத பிணையப் பத்திரங்கள் 2036 மறுவெளியீடு ரூபாய் 1,000 கோடி மற்றும் தமிழ்நாடு அரசின் 7.53 சதவீத பிணையப் பத்திரங்கள் 2037 மறுவெளியீடு ரூபாய் 1,000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் பிப்ரவரி 3, 2026 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (EKuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) பிப்ரவரி 3, அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தவெக பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மீதான வழக்கு விசாரணைக்கு தடை நீட்டிப்பு

சென்னை, ஜன.31

தமிழக வெற்றிக் கழகத்தின்தலைவர்விஜய், திருச்சியில் நடைபெற்ற அரசியல் சுற்றுப்பயண கூட்டத்துக்கு போலீஸ் அனுமதி பெறுவதற்காக அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 6ந்தேதி திருச்சிக்கு சென்றார். அப்போது, திருச்சி புதுக்கோட்டை சாலையில் உள்ள விமான நிலையம் எதிரே உள்ள விநாயகர் கோவிலில் அவர் மனுக்களை வைத்து வழிபாடு நடத்தினார்.

இதை கேள்விப்பட்டு அங்கே ஏராளமான த.வெ.க. தொண்டர்கள் திரண்டனர். இதனால், திருச்சி புதுக்கோட்டை சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்ட வாகனங்கள் அப்புறப்படுத்துமாறு போலீசார் கேட்டுக்கொண்டும் அதை கேட்காமல், போலீசாருடன் தொண்டர்கள் வாக்குவா



தத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, புஸ்சி ஆனந்த், திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் கரிகாலன் உள்ளிட்டோர் மீது பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி, புஸ்சி ஆனந்த் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, வழக்கு விசாரணைக்கு ஏற்கனவே தடை விதித்து இருந்தது.

இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. பின்னர், இந்த வழக்கை பிப்ரவரி 4ந்தேதிக்கு தள்ளிவைத்த நீதிபதி, அதுவரை ஏற்கனவே விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீட்டித்து உத்தரவிட்டார்.

## நந்தனம் இளம்பெண் பாலியல் வன்கொடுமை வழக்கு: 3 பேருக்கு நீதிமன்ற காவல்

சென்னை, ஜன.31

சென்னை நந்தனத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் உள்ள உணவகத்தில் புதுக்கோட்டையை சேர்ந்த 56 வயது நபரான குணசேகர் என்பவர் பணியாற்றி வருகிறார். இதே உணவகத்தில் வேலை செய்த 22 வயது பெண்ணை குணசேகர் கல்லூரி வளாகத்திலேயே வைத்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். மேலும் 5 பேரும் இளம் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட பெண் அழுது கொண்டே கல்லூரியில் உள்ள காவலாளியிடம் வேதனையுடன் தெரிவித்து உள்ளார்.

இதனையடுத்து உடனடியாக சைதாப்பேட்டை போலீசில் புகார் அளிக்கப்பட்டதை அடுத்து, குணசேகரன் கைது செய்யப்பட்டார். உணவக உரிமையாளரான அரசியல் பிரமுகர் கோட்டூர் செல்வம், நண்பர் கார்த்திக் ஆகியோரும் இந்த வழக்கில் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து, இளம் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த கேண்டீன் உரிமையாளர் முத்து செல்வம், அவரது நண்பர் கார்த்திகேயன், மாஸ்டர் குணசேகர் ஆகிய மூவரும் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது,

மூவருக்கும் வரும் 11ந்தேதி வரை நீதிமன்ற காவல் விதித்து சைதாப்பேட்டை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## நெல்லையில் 587 பேருக்கு காவலர்களுக்கான உடல் திறனாய்வு தேர்வு



சென்னை, ஜன.31

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் (TNUSRB) நடத்தும், 2025ம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை காவலர்கள், சிறை காவலர்கள் பதவிகளுக்கான உடல் தகுதி தேர்வு மற்றும் உடல் திறனாய்வு தேர்வு திருநெல்வேலியில் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை கவாத்து மைதானத்தில் நடைபெற்ற காவலர்களுக்கான உடல் தகுதி தேர்வு மற்றும் உடல் திறனாய்வு தேர்வுகளுக்கு, திருநெல்வேலி மாவட்ட தேர்வு மையத்திற்காக சிறப்பு கண்காணிப்பு அலுவலராக நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் மணிவண்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் மணிவண்ணன் மேற்பார்வையில், மாநகர போலீஸ் துணை கமிஷனர் விஜயகுமார் (தலைமையிடம்) தலைமையில் காவலர்களுக்கான உடல் தகுதி தேர்வு மற்றும் உடல் திறனாய்வு தேர்வுகள் 27.1.2026 முதல் தொடங்கி நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் நேற்று (29.1.2026) சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் உடல் தகுதி தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற 590 விண்ணப்பதாரர்களில் 587 விண்ணப்பதாரர்கள் உடல் திறனாய்வு தேர்வுகளான 100 மீட்டர் ஓட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல் மற்றும் பந்து எறிதல் போன்றவற்றில் கலந்து கொண்டனர்.


## பெண்களை பாதுகாக்க முடியாத திமுக அரசு, ஆளத் தகுதியற்ற அரசு வானதி சீனிவாசன்

கோயம்புத்தூர், ஜன.31

பாஜக எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை நந்தனத்தில் இயங்கிவரும் அரசு கலைக்கல்லூரியில் இளம் பெண் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் நெஞ்சை உலுக்குகின்றன. பாதிக்கப்பட்ட பெண் முழு மன மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் இந்தஅதிர்ச்சியில் இருந்து விரைவில் மீண்டு வர இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்.

பெண்களை வெறும் சதைக் குவியலாக கொச்சைப்படுத்தி பேசுபவர்களை நட்சத்திரப் பேச்சாளர்களாகக் கொண்டாடும் திமுக எனும் கட்சியிடம் ஆட்சி அதிகாரம் கிடைத்தால், பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடும் என்பதற்கான மற்றுமொரு சான்று இது. தமிழகத்தில் பெருகி வரும் பாலியல் குற்றங்களால் வெளியில் தலைகாட்டவே பெண்கள் பயந்து நடுங்கும் ஒரு



கேவலமான ஆட்சியை நடத்திக்கொண்டு, "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" என்ற பெயரில் விளம்பர விழா எடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

அரசு அலுவலகங்கள், அரசு பள்ளிகள், அரசு கல்லூரிகள் என அரசு இயந்திரத்தின் அனைத்து அங்கங்களையும் கயவர்கள் அரித்தெடுத்துக் கொண்டிருப்பதை அமைதியாக வேடிக்கை பார்ப்பதைத் தவிர திமுக அரசு வேறு எதையும் சாதித்துவிடவில்லை. தங்கள் அலட்சியப்போக்கால் ஒட்டுமொத்த தமிழகப் பெண்களின் பாதுகாப்பையே கயவர்களிடம் அடகுவைத்த திமுகவின் அவல ஆட்சியை அரியணையில் இருந்து அகற்றும் வரை மக்கள் ஓயமாட்டார்கள்!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## திமுக-காங்கிரஸ் இடையேயான நெருடல் மறைந்து போகும்: வைகோ

திருச்சி, ஜன.31

திருச்சி விமான நிலையத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

தி.மு.க.விற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் நெருடல் இருப்பது போல் தோன்றும். ஆனால் அது மறைந்து போகும். தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி, ராகுல்காந்தியை சந்தித்து பேசியதில் நெருடல் இருக்காது. இதனைஅமித்ஷாவை எடப்பாடி பழனிசாமி சந்தித்ததோடு ஒப்பிடுவதற்கு, எடப்பாடி பழனிசாமி தகுதியற்றவர். அ.தி.மு.க.வைபா.ஜனதா தலைவர்கள் எவ்வளவு அவமானப்படுத்தினாலும், அதை சகித்துக் கொண்டிருந்தவர்தான் பழனிசாமி.

வருகிற பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஓர வஞ்சனை செய்வார்கள். இருந்தபோதும் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாட்டை இதுவரை இல்லாத அளவிற்கு



புகழ்வார்கள். தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி விடலாம் என பிரதமர் மோடி காணும் பகல் கனவு ஒருபோதும் பலிக்காது.

தி.மு.க. கூட்டணி 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறும் என்று முதல்அமைச்சர் கூறியுள்ளார். அதையே நானும் வழிமொழிகிறேன். தி.மு.க. கூட்டணியில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது, எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்து தி.மு.க. தலைமையிடம் பேசி அதன் பின்னர் முடிவெடுப்போம். எந்த சின்னத்தில் போட்டி என்பதை பொறுத்திருந்து பாருங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## சாக்கு மூட்டையில் பிணம் இருந்த வழக்கு: கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலை தேடும் பணி தீவிரம்

சென்னை, ஜன.31

பீகார் மாநிலத்தை சேர்ந்த கவுரவ் குமார் என்பவர் தனது மனைவி மற்றும் 2 வயது ஆண் குழந்தையுடன் சென்னைக்கு வேலை தேடி வந்தார். வேலை கிடைக்காததால் பீகார் மாநிலத்தை சேர்ந்த சிக்கந்தர் என்பவருடன் தங்கியிருந்தார்.

தரமணி மத்திய பாலிடெக்னிக் வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் தங்கியிருந்தபோது சிக்கந்தர் அவரது நண்பர்களுடன் சேர்ந்து கவுரவ் குமாரின் மனைவியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார். அதில் நடந்த மோதலில் கவுரவ் குமாரும் அவருடைய மனைவியும், 2 வயது ஆண் குழந்தையும் மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

3 பேரின் உடல்களையும் சாக்குமூட்டையில் கட்டி, தனித்தனி இடங்களில் வீசிவிட்டனர். கவுரவ் குமாரின் உடல் அடையாறு இந்திரா நகர் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. குழந்தையின் உடல் தரமணி மத்திய கைலாஷ் ரெயில் நிலையம் அருகே உள்ள சாக்கடை கால்வாய்க்குள் இருந்து மீட்கப்பட்டது.

கவுரவ் குமார் மனைவியின் உடல் பெருங்குடி குப்பைமேட்டில் வீசப்பட்டது. குப்பைமேட்டில் பெண்ணின் உடலை போலீசார் தொடர்ந்து தேடி வருகிறார்கள். உடல் இன்னும் கிடைக்கவில்லை. இந்த வழக்கில் சிக்கந்தரும் அவரின் நண்பர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்த படுகொலை சம்பவம் சென்னை நகரையே உலுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விஜய்யை இயக்கும் கொள்கை ஆசான் யார்? தமிழக பா.ஜனதா கேள்வி

சென்னை, ஜன.31

தமிழக பா.ஜனதா செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நடிகர் விஜய் ஊழலையும், வாரிசு அரசியலையும் ஒழிப்பதற்காக அரசியலுக்கு வந்தேன் என்று ரசிகர்களுக்கும் தொண்டர்களுக்கும், தமிழக மக்களுக்கும் சத்தியம் செய்ததை மறந்தது ஏன்?. விஜய்யை இயக்கும் கொள்கை ஆசான் யார்?. விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனைதான் கொள்கை ஆசான் என்று த.வெ.க. தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் அறிவித்ததின் பின்னணி என்ன?. அனைத்துக் கட்சிகளுக்கும் அறிவுரை சொல்லும் திருமாவளவன் நடிகர் விஜய்யை காங்கிரசோடு கைகோர்க்க வேண்டும் என்று மறைமுகமாக ஆதவ் அர்ஜூனா மூலம் அறிவுரை சொல்வது ஏன்?.

எதிர், எதிர்துருவங்கள் போல காட்டிக் கொண்டு பா.ஜனதாவை எதிர்ப்பதில் மறைமுகமாக ஒன்றிணைந்து, இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக செயல்படும் அரசியல் நடிகர் விஜய்யும், ஒரு படத்தில் நடித்திருந்தாலும், தேர்தல் நேரத்தில் புதுப்புது அரசியல் கேரக்டராக, தன் அரசியல் நடிப்பை வெளிப்படுத்தி வரும் திருமாவளவனும் இனி தமிழக மக்களை ஏமாற்ற முடியாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

31.01.2026

# அறிவாலயத்து அதிகாரம் என்ன செய்கிறது? தவெக கேள்வி



சென்னை, ஜன.31

தவெக கொள்கை பரப்பு செயலாளர் அருண்ராஜ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே 22 வயது இளம்பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் கடும் அதிர்ச்சியை அளிக்கிறது. தரமணியில் ஒரு குடும்பமே சிதைக்கப்பட்ட சம்பவத்தின் ரணம் ஆறுவதற்குள், தலைநகரின் மையப்பகுதியில் அடுத்த கொடூரம் அரங்கேறியிருப்பது தமிழகத்தின் சட்டம்ஒழுங்கு தோல்வியையே காட்டுகிறது.

"விடியல் தருகிறோம்" என்று வாக்குறுதி அளித்து ஆட்சியில் அமர்ந்த திமுகவின் இந்த நிர்வாகத்தில், கல்வி பயிலும் புனிதமான வளாகங்களுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லாதது பெரும் வேதனைக்குரியது.

அரசு நிறுவனங்களின் மூக்கிற்கு அடியிலேயே இத்தகைய குற்றங்கள் துணிச்சலாக நடத்தப்படுவது, குற்றவாளிகளுக்குச் சட்டத்தின் மீதோ அல்லது காவல்துறையின் மீதோ எவ்வித அச்சமும் இல்லை என்பதையே காட்டுகிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக வெற்று விளம்பரங்களில் கோடிக்கணக்கில் செலவு செய்யும் இந்த அரசு, களத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிவிட்டது.

குறிப்பாக, அரசு கல்லூரிகளில் முறையான கண்காணிப்பு கேமராக்களோ அல்லது தகுந்த பாதுகாப்பு ஊழியர்களோ இல்லாதது இந்த நிர்வாகத்தின் மெத்தனப் போக்கையே அம்பலப்படுத்துகிறது.எனவே, இந்தச் சம்பவத்தில் உடனடியாகக் நடவடிக்கை எடுத்துக் கடுமையான தண்டனை வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். இனிவரும் காலங்களில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு கல்வி நிறுவனங்களிலும் சிசிடிவி கண்காணிப்பு மற்றும் 24 மணி நேரப் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். முதல்அமைச்சர் அவர்களே!!! அறிவாலயத்து அதிகாரம் என்ன செய்கிறது? உங்கள் ஆட்சிச் சக்கரம் யாருக்காகச் சுழல்கிறது? வாக்குக்கு ஒரு நீதி, வாழ்க்கைக்கு ஒரு நீதியா? உங்கள் ஆட்சிக்கு மக்கள் முடிவு கட்டும் காலம் வந்துவிட்டது.என தெரிவித்துள்ளார்.

# வெள்ளியங்கிரி மலையேற நாளை முதல் அனுமதி



கோவை, ஜன.31

கோவை அருகே மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. இதன் அருகே 7வது மலையில் வெள்ளியங்கிரி ஆண்டவர் சுயம்பு லிங்கமாக வீற்றிருக்கிறார். இது தென்கைலாயம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த மலைக்கு அடர்ந்த வனப்பகுதி வழியாகவும், மலைமீதும் நடந்து செல்ல வேண்டும் என்பதால், காலநிலை காரணமாக குளிர்காலத்தில் செல்ல அனுமதி அளிப்பது இல்லை. மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதத்தில் மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கோர்ட்டு உத்தரவு காரணமாக தற்போது பிப்ரவரி மாதம் 1ந் தேதி (நாளை மறுநாள்) முதல் மலையேற பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. அத்துடன் மலையேறும் பக்தர்களுக்கு வனத்துறை சார்பில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளது. பக்தர்களுக்கு தேவையான ஏற்பாடுகளை மாவட்ட வனத்துறை அதிகாரிகள் தீவிரமாக செய்து வருகிறார்கள்.

இதுகுறித்துகோவைமாவட்டவனஅதிகாரிகூறியதாவது:

வெள்ளியங்கிரி மலைக்கு செல்லும் பக்தர்கள் மிகவும் பாதுகாப்புடன் செல்ல வேண்டும். உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டவர்கள் செல்லக் கூடாது. பக்தர்களின் வசதிக்காக வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் ஆம்புலன்ஸ் நிறுத்தப்பட்டு இருக்கும். மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, உடல் தகுதியுடன் இருக்கும் பக்தர்கள் மட்டுமே மலையேற அனுமதிக்கப்படுவார்கள்.

3, 6 மற்றும் 7வது மலையில் மருத்துவ முகாம் அமைக்கப்படும். அதில் மருத்துவ ஊழியர்களுடன் வனத்துறை அதிகாரிகளும் இணைந்து செயல்படுவார்கள். வனத்துறையினரும், தீயணைப்புத்துறையினரும் அடிவாரத்தில் தயாராக இருப்பார்கள். அத்துடன் 8 பேர் கொண்ட கண்காணிப்பு குழுவினர் மலை மீது ரோந்து பணியில் ஈடுபட்டு வருவார்கள்.

மலை மீது செல்லும் பக்தர்கள் யாரும் போதைப்பொருட்கள் கண்டிப்பாக உபயோகிக்கக்கூடாது. அதுபோன்று பிளாஸ்டிக் பொருட்களை எக்காரணத்தை கொண்டும் எடுத்துச் செல்லக்கூடாது. இதை அடிவாரத்தில் இருந்து கண்காணித்து, பிஸ்கெட் போன்ற பொருட்கள் கொண்டு வரும்போது அதில் உள்ள பிளாஸ்டிக் கவர்களை அப்புறப்படுத்தி காகிதத்தில் வைத்து கொடுக்கப்படும்.

கடந்த ஆண்டில் மலையேறிய 9 பேர் உயிரிழந்தனர். எனவே தற்போது உயிரிழப்பை தடுக்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. எனவே மலையேறும் பக்தர்கள் மிகவும் பாதுகாப்புடன் சென்று திரும்ப வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் (31.01.2026)

**மேஷம்:** இன்று உங்களுக்குச் சவால்கள் நிறைந்த நாளாக இருந்தாலும், விடா முயற்சியால் வெற்றி காண்பீர்கள். பணியிடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். புதிய முதலீடுகள் செய்ய இன்று உகந்த நாள். கணவன் மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பயணங்களின் போது உடைமைகளில் கவனம் இருக்கட்டும்.

**கடகம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் உதவி கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும்.

**சிம்மம்:** தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தந்தையின் உடல்நலத்தில் அக்கறை காட்டுங்கள். அரசு வழி காரியங்கள் தடையின்றி முடியும்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். புதிய நண்பர்களின் அறிமுகம் உற்சாகம் தரும். ஆன்மீகப் பயணங்கள் மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். ஆடம்பரப்பொருட்கள்வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கியத்தில் சிறு உபாதைகள் தோன்றி மறையும். பிறருக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். பொறுமை அவசியம்.


**தனுசு:** சுபச் செய்திகள் வந்து சேரும். திருமணப் பேச்சுவார்த்தைகள் சாதகமாக முடியும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**மகரம்:** உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். சொத்துச் சேர்க்கைக்கான முயற்சிகள் பலன் தரும். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்புகள் விலகும். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் பதவி உயர்வுக்கான அறிகுறி தென்படும்.

**மீனம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை. பெரியோர்களின் ஆசி கிட்டும்.

# கத்தியால் தாக்கி கொலை மிரட்டல் வழக்கில் வாலிபருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை



தூத்துக்குடியைச் சேர்ந்த நேக்சன் (வயது 20) என்பவர் கடந்த 2024ம் ஆண்டு தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒருவரிடம் தகராறு செய்து கத்தியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்.

இதுகுறித்து வடபாகம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இந்த வழக்கின்விசாரணைதூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்III ல் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி விஜயராஜ்குமார் நேற்று (29.1.2026) நேக்சன் என்பரை குற்றவாளி என தீர்ப்பளித்து 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.500 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்ததூத்துக்குடி நகரஉட்கோட்ட டி.எஸ்.பி. சுனில், இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த வடபாகம் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் சிவக்குமார் மற்றும் வடபாகம் காவல் நிலைய காவல்துறையினர், அப்போதைய வடபாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மாரிமுத்து, நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் கண்ணன் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# திமுக கூட்டணிக்கு காங்கிரஸ் எந்தவித நெருக்கடியும் கொடுக்கவில்லை: செல்வப்பெருந்தகை

திருவாரூர் மாவட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கூட்டம் திருவாரூரில் முன்னாள் மாவட்ட தலைவர் நீலன் அசோகன் தலைமையில் நடந்தது. மாவட்ட தலைவர் மன்னை மதியழகன் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் தாஹீர் வரவேற்றார். கூட்டத்தில் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார். பின்னர் செல்வப்பெருந்தகை செய்தியாளர்கள்சந்திப்பில்கூறியதாவது: தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் தடுக்க கடுமையான சட்டம் இயற்ற வேண்டும். கடுமையான தண்டனை மூலம் தான் தவறு செய்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்த முடியும். காங்கிரசை பொறுத்தவரை தி.மு.க. கூட்டணிக்கு எந்தவித நெருக்கடியும் கொடுக்கவில்லை. எங்களுக்கு எதை வேண்டுமோஅதனைகேட்டுபெறுவோம். பா.ஜனதாஅ.தி.மு.க. கூட்டணி என்பது பொருந்தாத கூட்டணி. பிரதமர் நரேந்திர மோடி பேசும்போது ஒரு இடத்தில் கூட எடப்பாடி பழனிசாமி பெயரையோ, அ.தி.மு.க. பெயரையோ உச்சரிக்கவில்லை. அதற்கு மாறாக பா.ஜனதா கூட்டணி, என்.டி.ஏ. கூட்டணி என்று தான் கூறுகிறார். எங்கள் தலைவர் ராகுல்காந்தி பேசும்போது தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் பெயரை உச்சரிப்பதுதான் வழக்கம். கனிமொழி எம்.பி. முகத்தில் துண்டை போட்டுக்கொண்டா ராகுல்காந்தியை போய் சந்தித்தார்? முகத்தில் துண்டை போட்டுக்கொண்டு மாறுவேடம் போட்டு, போய் பார்த்தது யார்?. துணிச்சலாக சிங்கப்பெண்ணாக இருக்கிற கனிமொழி தன்னுடைய காரில்தான் சென்றார். மாற்றுக்காரில் செல்லவில்லை. தமிழ்நாட்டு மக்களை பாஜகவிடம் அடகு வைப்பதற்காக, முகத்தில்துண்டை போட்டுக்கொண்டு சென்றார்கள். ஆனால் எங்கள் சந்திப்பு நேர்மையான கண்ணியமான சந்திப்பு. இவ்வாறு அவர் கூறினார்.

# அஜந்தாஎல்லோரா திரைப்பட விழாவில் இளையராஜாவிடம் விருது பெற்ற பிரபல நடிகை



நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் 'மிஸ்டர் பச்சன்' மூலம் தெலுங்கில் அறிமுகமானாலும், 2025 ஆம் ஆண்டில் பல படங்களில் நடித்து, தென்னிந்திய சினிமாவில் மிகவும்பரபரப்பானநடிகைகளில்ஒருவராகதிகழ்ந்தார். இந்த ஆண்டு அவரின் மூன்று படங்கள் வெளியாகின. கிங்டம், காந்தா மற்றும் ஆந்திரா கிங் தாலுகா .இந்தப் படங்கள் எதுவும் பெரிய அளவில் பாக்ஸ் ஆபீஸில் வெற்றி பெறவில்லை என்றாலும், பாக்யஸ்ரீ தனது நடிப்பால் ரசிகர்களை கவர்ந்தார்.

நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் தமிழில் காந்தா திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார். நடிப்பாற்றலுடன்கூடியஅழகானதோற்றத்தால்தமிழ், தெலுங்குதிரைத்துறையில்பலபடங்களில்வாய்ப்பைப் பெற்று வருகிறார். தமிழில் வெளியான காந்தா படத்திலும் அவரது நடிப்பு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பாக்யஸ்ரீ போர்ஸ், நாகார்ஜுனாவின் இளைய மகன் அகில் அக்கினேனி நடித்த 'லெனின்' படம் விரைவில் வெளியாக உள்ளது.

இந்நிலையில். நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் தனது இன்ஸ்டா பக்கத்தில் இளையாராஜாவுடனான புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். அதில் "டியர் இளையராஜா சார், எனது சொந்த மண்ணான சத்ரபதி சம்பாஜிநகரில் நடைபெற்ற அஜந்தா எல்லோரா திரைப்பட விழாவில் உங்களிடம் இருந்து விருது வென்றதை மிகவும் கவுரமாக கருதுகிறேன். உங்கள் ஆசிர்வாதத்துடன் எனது பயணத்தைத் தொடங்குவதில் மிகுந்த கருணையாக உணர்கிறேன். அழகான கவுரவம் மற்றும் மரத்வாடாவின் மகளான என்னை இவ்வளவு கொண்டாடியதிற்கு ஏ.ஐ.எப்.எப்க்கு மிக்க நன்றி. கருணைமிக்க வார்த்தைகளுக்காக ரசூல்பூக்குட்டி சாருக்கும் நன்றிகள். இந்தப் பயணத்தை மறக்க முடியாத ஞாபகமாக்கிய சந்திரகாந்த் குல்கர்னி அவர்களுக்கும் சிறப்பான நன்றிகள்" என நெகிழ்ச்சியாக பதிவிட்டுள்ளார்.

# சினிமா துறையில் பாலியல் சுரண்டல் இல்லை நடிகர் சிரஞ்சீவி



அனில் ரவிபுடி இயக்கியிருக்கும் திரைப்படம், 'மன சங்கர வர பிரசாந்த் காரு'. இந்தப் படத்தில்தெலுங்குசினிமாவின்உச்சநடிகராகஇருக்கும்சிரஞ்சீவி,நாயகனாகநடித்திருக்கிறார். கதாநாயகியாக நயன்தாராவும், இரண்டாவது நாயகியாக கேத்ரின் தெரசாவும் நடித்துள்ளனர். சிறப்பு தோற்றத்தில் வெங்கடேஷ் நடித்திருக்கிறார். அனில் ரவிபுடியின் 9வது படமாக 'மன சங்கரவரபிரசாந்த்காரு'கடந்த 12ஆம் தேதி வெளியானது. இப்படம்உலகளவில் 15நாட்களில் ரூ.358 கோடி வசூல் செய்துள்ளது.

இந்நிலையில் 'மன சங்கர வர பிரசாந்த் காரு' படம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சிரஞ்சீவி சினிமாத்துறையில் வேலை வாய்ப்புக்காக பாலியல் சுரண்டல் இல்லை என்று பேசியது சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது. இதுதொடர்பாகப் பேசிய அவர், "சினிமா ஒரு மிகச்சிறந்தத் துறை. இதில் யாருக்காவது எதிர்மறையான அல்லது கசப்பான அனுபவங்கள்ஏற்பட்டிருந்தால், அதற்கு அவர்களின்தனிப்பட்ட முடிவுகளும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று நான் நம்புகிறேன். நீங்கள் உங்கள் தொழிலில் தீவிரமாக இருந்தால், யாரும் உங்களைப் பயன்படுத்திக் கொள்ளப்போவதில்லை. சினிமாவில் வேலை வாய்ப்புக்காக பாலியல் சுரண்டல் இல்லை. இதுப்போன்ற கலாசாரம் இங்கு இல்லை. யாருக்காவது ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டால் அது அவர்களுடைய சொந்த தவறுதான். இந்தத் துறை ஒரு கண்ணாடி போன்றது. நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ, அதையே அந்தக் கண்ணாடியில் காண்பீர்கள்" என்று பேசியிருக்கிறார். சிரஞ்சீவியின் இந்த பேச்சுக்கு எதிராகப் பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர்.

# "வித் லவ்" திரைப்படத்தின் டிரெய்லரை வெளியிட்ட அட்லீ




'டூரிஸ்ட் பேமிலி' படத்தின் மூலம் பிரபலமான இயக்குனர் அபிஷன் ஜீவிந்த் தற்போது கதாநாயகனாக 'வித் லவ்' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக மலையாள நடிகை அனஸ்வரா ராஜன் நடித்து வருகிறார். ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார்.

டூரிஸ்ட் பேமிலி படத்தில் அபிஷன் ஜீவிந்திடம் உதவி இயக்குனராக இருந்த மதன் இப்படத்தை இயக்கியுள்ளார். எம்ஆர்பி என்டர்டெயின்மெண்ட் மற்றும் சவுந்தர்யா ரஜினிகாந்த் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளனர். இப்படத்தின் 'அய்யோ காதலே', 'மறந்து போச்சே' பாடல்கள் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 'வித் லவ்' படத்தின் டிரெய்லரை இயக்குநர் அட்லீ வெளியிட்டார். இப்படம் பிப்ரவரி 6ந் தேதி வெளியாகிறது.

# மகளிர் பிரிமீயர் லீக்: மும்பை அணிக்கு 168 ரன்கள் இலக்கு நிர்ணயித்த குஜராத்



5 அணிகள் பங்கேற்றுள்ள 4வது மகளிர் பிரிமீயர் லீக்(டபிள்யூ.பி.எல்.) கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் வதோதராவில்நடந்துவருகிறது.இதில்இன்றுநடைபெறும் 19வது லீக் ஆட்டத்தில் மும்பை குஜராத் அணிகள் மோதுகின்றன.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற குஜராத் அணியின் கேப்டன் அஸ்லி கார்ட்னர் பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி குஜராத் அணி முதலில் பேட்டிங் செய்தது .

தொடக்கம் முதல் குஜராத் அணி வீராங்கனைகள் அதிரடியாக விளையாடினர். இதனால் 20 ஓவர்கள் முடிவில் குஜராத் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 167 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் அஸ்லி கார்ட்னர் 46 ரன்களும், ஜார்ஜ்வெறெகாம் 44 ரன்களும் எடுத்தனர். தொடர்ந்து 168 ரன்கள் இலக்குடன் மும்பை அணி விளையாடுகிறது.

# டி20 உலகக் கோப்பை தொடருக்கான நடுவர்கள் அறிவிப்பு



டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடரானது பிப்ரவரி 7ம் தேதி துவங்கி மார்ச் 8ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற இருக்கிறது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்று விளையாட இருக்கும் இந்த தொடரில் கோப்பையை கைப்பற்றப்போகும் அணி எது? என்பது குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இந்த தொடருக்கான நடுவர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடுவர்கள் விவரம்:

கபானி, கெட்டில்பரோ, மேனன், டக்கர், ரீபெல், தர்மசேனா, இல்லிங்வொர்த், ரோலண்ட் பிளாக், கிறிஸ் பிரவுன், ஹோல்ட்ஸ்டாக், வெய்ன் நைட்ஸ், டோனோவன் கோச், மதனகோபால், நோகாஜ்ஸ்கி, பத்மநாபன், பலேக்கர், அஹ்சன் ராசா, லெஸ்லி ரீபர், லாங்டன் ருசெரே, ஷர்ஃபுடோலா, காசி சோஹெல், அலெக்ஸ் வார்ப், விமலசிறி , ஆசிப் யாகூப்

# டி20 உலகக் கோப்பையை வெல்ல இந்தியாவுக்கு வாய்ப்பு: ரவி சாஸ்திரி கணிப்பு



2026 டி20 உலகக் கோப்பை அடுத்த மாதம் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ளது. இந்த தொடருக்கு அனைத்து அணிகளும் தீவிரமாக தயாராகி வருகின்றன.

இந்த நிலையில், 2026 உலகக் கோப்பையை வெல்லும் வாய்ப்பு இந்தியாவுக்கு உள்ளதாக இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இந்திய வீரர்களின் தனிப்பட்ட திறமை, தற்போதைய பார்ம், போட்டிக்கான பிட்னஸ், சமீப காலங்களில் அவர்கள் விளையாடிய கிரிக்கெட் போட்டிகளின் அளவு ஆகியவை அவர்களைத் தெளிவான வெற்றி வாய்ப்புள்ள அணியாக ஆக்குகின்றன. குறிப்பாக, அவர்களின் முன்னணி பேட்டிங் வரிசையையும் அவர்கள் இருக்கும் சிறப்பான ஆட்ட நிலையையும் குறிப்பாக, அவர்களின் முன்னணி பேட்டிங் வரிசையையும் அவர்கள் இருக்கும் சிறப்பான ஆட்ட நிலையையும் பார்க்கும்போது இது உறுதியாகிறது.எனத் தெரிவித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066